பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
13 07 2026 MONDAY 6 30 PM
வணக்கம்-மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1) தேசிய கல்விக் கொள்கை, தொழில்நுட்ப பயன்பாட்டிற்கு ஊக்கமளித்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2) உயர்கல்விக்கான மாணவர் சேர்க்கை இதுவரை இல்லாத அளவிற்கு அதிகரித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3) பொதுப்பணித்துறையின் செயல்பாடுகள் குறித்து முதலமைச்சர் திரு. விஜய், இன்று சென்னையில் ஆய்வு மேற்கொண்டார்.

4) மதுரை அருகே நேரிட்ட சாலை விபத்தில் 6 பேர் உயிரிழந்தனர்.

5) இங்கிலாந்துக்கு எதிரான வரலாற்றுச் சிறப்புமிக்க மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 270 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

>>>>>>>><<<<<<<<

தேசிய கல்விக் கொள்கை, தொழில்நுட்ப பயன்பாட்டிற்கு ஊக்கமளித்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதுதொடர்பாக நாளிதழில் வெளியான கட்டுரையையும் பகிர்ந்துள்ளார்.

எதிர்காலத்தை கருத்தில் கொண்டு செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப பயன்பாடு, பள்ளிகளில் அதிகரித்துள்ளது குறித்து அந்த கட்டுரையில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

>>>>>>>><<<<<<<<

மத்திய அரசு மேற்கொண்ட சீர்திருத்த நடவடிக்கைகள் காரணமாக, உயர்கல்விக்கான மாணவர் சேர்க்கை இதுவரை இல்லாத அளவிற்கு அதிகரித்துள்ளதாக மகளிர் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி. அன்னபூர்ணா தேவி தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதுதொடர்பாக நாளிதழில் வெளியான கட்டுரையையும் பகிர்ந்துள்ளார்.

நாடுமுழுவதும் உயர்கல்விக்கான மாணவர் சேர்க்கை தொடர்பாக நடத்தப்பட்ட ஆய்வில் இது தெரியவந்துள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

2014ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 31 புள்ளி ஐந்து சதவீதம் அதிகரித்துள்ளதாக அந்த கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர்கல்வியில் மகளிர் பங்களிப்பும் அதிகரித்துள்ளது இந்த ஆய்வின் போது தெரியவந்துள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>>>><<<<<<<<

பொதுப்பணித்துறையின் செயல்பாடுகள் குறித்து முதலமைச்சர் திரு. விஜய், இன்று சென்னையில் ஆய்வு மேற்கொண்டார்.

*இதனைத் தொடர்ந்து, தமது சட்டப்பேரவை தொகுதியான பெரம்பூர் சென்ற அவர், அங்கு சட்டப்பேரவை உறுப்பினர் அலுவலகத்தை திறந்து வைத்தார்.*

*பின்னர், வியாசர்பாடியில் உள்ள அரசு போக்குவரத்துக் கழக பணிமனைக்கு சென்ற அவர், மின்சார பேருந்துகளை ஆய்வு மேற்கொண்டார்.*

*மின் வாகனங்களை 24 மணி நேரமும் சார்ஜ் செய்வதற்கான கட்டமைப்பு வசதியை முதலமைச்சர் திறந்து வைத்தார்.*

*>>>>>>>><<<<<<<<*

*த.வெ.க. அரசின் குதிரைபேர அரசியல் குறித்து, மாநில ஆளுநர் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கரிடம், திமுக சார்பில் மீண்டும் புகார் அளிக்கப்பட்டுள்ளதாக அக்கட்சியின் அமைப்புச் செயலாளர் திரு. ஆர்.எஸ் பாரதி கூறியுள்ளார்.*

*இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஆளுநர் உரிய நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் திமுக நீதிமன்றத்தை நாடும் என்றும் தெரிவித்தார்.*

*>>>>>>>><<<<<<<<*

காவிரி டெல்டா விவசாயிகளின் நலன்களை காக்க, த.வெ.க. அரசு சிறப்பு திட்டத்தை வகுக்க வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், காவிரியில் தமிழகத்திற்கு உரிய நீரை கர்நாடக அரசு திறந்து விடாததை சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த சூழலில், வடகிழக்கு பருவமழையும் பொய்த்துப் போகும் என்று கணிக்கப்பட்டிருப்பதால் சம்பா சாகுபடி நடைபெற வாய்ப்பில்லை என்று உழவர்கள் கூறியுள்ளதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சூழலை சமாளிக்க அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாதது ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது என்று டாக்டர் அன்புமணி ராமதாஸ் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

>>>>>>>><<<<<<<<

மதுரை மாவட்டம், மேலூர் அருகே இன்று அதிகாலை நேரிட்ட சாலை விபத்தில் 6 பேர் உயிரிழந்தனர், 40-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இரண்டு பேருந்துகள் மோதிக் கொண்டதில் இந்த விபத்து நேரிட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - ரகுராஜா 41 செகண்ட்ஸ்)*

*இதற்கிடையே, இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 3 லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், லேசான காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.*

*>>>>>>>>><<<<<<<<*

*தமிழகத்தில் கோவிட் 19 பாதிப்பு குறித்து பொதுமக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளது.*

*இதுதொடர்பாக மக்கள் நல்வாழ்வுத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தற்போது பரவிவரும் வைரஸ் லேசான வெளிப்பாட்டை கொண்டுள்ளதை, புனே-யில் தேசிய வைரலாஜி நிறுவனம் உறுதி செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*நடப்பாண்டில் இதுவரை 335 பேருக்கு மட்டும் தான் இந்த தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*இவை அனைத்தும் வழக்கமான நோய் கண்காணிப்பின் போது கண்டறியப்பட்டவை என்றும், தொற்று பரவல் காரணமாக ஏற்பட்டவையல்ல என்றும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.*

இருப்பினும், முதியவர்கள், கர்ப்பிணிகள், நீண்டகால உடல்நலக் குறைபாடு கொண்டவர்கள், நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ளுமாறும் அந்த செய்திக்குறிப்பில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

>>>>>>>><<<<<<<<

மத்திய அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்வதில், தேசிய இளையோர் தன்னார்வலர்கள் முக்கியப் பங்கு வகிப்பதாக காஞ்சிபுரம் மாவட்ட mybharat துணை இயக்குநர் திரு. சரவணன் கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூரில் உள்ள ராஜீவ்காந்தி தேசிய இளையோர் மேம்பாட்டு நிறுவனத்தில் தன்னார்வலர்களுக்கான இரண்டாம் கட்ட அறிமுகப் பயிற்சி நிறைவு விழாவில் அவர் உரையாற்றினார்.

(சவுண்ட் பைட் - சரவணன் 39 செகண்ட்ஸ்)

>>>>>>>><<<<<<<<

லஞ்சஒழிப்புத்துறை இயக்குநர் திரு. அருண், காவலர் பயிற்சி மையத்தின் இயக்குநராக பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

லஞ்ச ஒழிப்புத் துறையின் ஐ.ஜி. திருமதி. மகேஷ்வரிக்கு கூடுதலாக அத்துறையின் இயக்குநர் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

>>>>>>>><<<<<<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 4 தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

>>>>>>>><<<<<<<<<

மாவட்டச் செய்திகள்

தூத்துக்குடி மாவட்டத்தில் தொழில்முனைவோருக்கான கடனுதவிகளை மாநில அமைச்சர் திரு. மதன்ராஜா இன்று வழங்கினார்.

>>>>>>>><<<<<<<<<

திருப்பத்தூர் மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திரு. ரவிக்குமார் இன்று வழங்கினார்.

>>>>>>>><<<<<<<<<

தேனி மாவட்ட கேந்திரிய வித்யாலயா பள்ளி தற்காலிகமாக அல்லிநகரம் நகராட்சி தொடக்கப் பள்ளி வளாகத்தில் செயல்படவுள்ளதாகவும், மாணவர் சேர்க்கை வரும் 15ஆம் தேதி முதல் தொடங்கவுள்ளதாகவும் ஆட்சியர் திரு. வைத்திநாதன் கூறியுள்ளார்.

>>>>>>>><<<<<<<<<

செங்கல்பட்டு மாவட்டத்தில் மக்கள்தொகை தினம் குறித்த விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு. வீரப்பன் இன்று தொடங்கி வைத்தார்.

>>>>>>>><<<<<<<<<

விழுப்புரம் அருகே 2 லட்சம் ரூபாய் மதிப்பிலான போதைப்பொருளை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

*>>>>>>>><<<<<<<<*

*நாமக்கல் மண்டலத்தில் முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 6 ரூபாய் 70 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.*

*>>>>>>>><<<<<<<<*

*ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணையிலிருந்து நாளை தொடங்கி வரும் 28ஆம் தேதிவரை தண்ணீர் திறந்து விடப்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.*

*>>>>>>>><<<<<<<<*

*விளையாட்டுச் செய்திகள்*

*இங்கிலாந்துக்கு எதிரான வரலாற்றுச் சிறப்புமிக்க மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 270 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.*

*Lords-ல் நடைபெற்ற இப்போட்டியின் நான்காவது மற்றும் இறுதி நாளான இன்று, 457 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் 6 விக்கெட் இழப்புக்கு 130 ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன், இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்து ஆடிய இங்கிலாந்து 186 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.*

*அதிகபட்சமாக Amy Jones 54 ரன் எடுத்தார்.*

*Sneh Rana அபாரமாக பந்துவீசி 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.*

*முதல் இன்னிங்ஸில் 285 ரன்னுக்கு ஆட்டமிழந்த இந்தியா, இரண்டாவது இன்னிங்ஸில் 7 விக்கெட் இழப்புக்கு 341 ரன் எடுத்திருந்த நிலையில் ஆட்டத்தை முடித்துக் கொள்வதாக அறிவித்தது.*

*இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் 170 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.*

*>>>>>>>><<<<<<<<*

*இந்தியா - இலங்கை இடையேயான முதலாவது இளையோர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்கியது.*

*Galle-யில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்து வரும் இலங்கை, முதல் இன்னிங்ஸில் ஆட்டநேர இறுதியில் 4 விக்கெட் இழப்புக்கு 344 ரன் எடுத்துள்ளது.*

*Senuja Wekunagoda இரட்டைச் சதம் அடித்து, 203 ரன்னுடன் ஆட்டமிழக்காமல் உள்ளார்.*

*>>>>>>>><<<<<<<<*

*சென்னையில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் Suraj Chand உட்பட 6 பேர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.*

*>>>>>>>><<<<<<<<*

*பாங்காக்கில் நடைபெற்று வரும், 18 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கூடைப்பந்து போட்டியில், இன்று, இந்தியா 84-30 என்ற புள்ளிக்கணக்கில் தாய்லாந்தை வென்றது.*

*>>>>>>>><<<<<<<<*